திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒப்பந்தத்தை மீறி வருவதாக அரசாங் கத்திற்குத் தொடர்ந்து புகார் வந்திருக்கிறதா ? ஒப்பந் தத்தை மீறிய அந்த நிர்வாகத்தின் மீது அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, ஒரு ஒப்பந்தத்தை மீறியிருக்கிறது என்று சொன்னால் புகார் மனு அரசிற்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தத்தை மீறி இருக்கிறார்களா என்று பரிசீலனை செய்து, அதில் ஒப்பந்தத்தை மீறியிருக்கிறார்கள் என்று அரசு கருதி னால் தொழில் தகராறு சட்டம் 29-ன் கீழ் யார் குற்றம் செய் திருந்தாலும், முதலாளி, தொழிலாளி யாராக இருந்தாலும் அவர் கள்மீது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வ.மு. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை, ஓய்வுபெற்றவர்களுடைய வாரிசுக்கு வேலை கொடுக் கின்ற பிரச்னை. ஓய்வுபெற்றவர்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேறியவர்கள். அப்படியிருக்கும்போது நிர்வாகம் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்க முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, அரசே முன்வந்து இதனை நிறைவேற்ற வேண்டும். ஏற்கனவே ஓய்வுபெற்றவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை அளிக்கக்கூடாது என்ற முறையிலே, அங்குள்ள சங்கத்தினரே புறக்கணிக்கிறார்கள். தங்களுடைய சுயநலத்தின் காரணமாக, ஓய்வுபெற்றவர்களுடைய பிள்ளைகளை மறு படியும் அனுமதித்தால், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேலை கொடுக்க முடியாது என்ற நிலையிருப்பதால், அவர்கள் எதிர்க்கிறார்கள், ஆகவே, ஓய்வுபெற்றவர்களுக்காக அரசே தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, சமரச அதிகாரிகள்—கன்சிலியேஷன் ஆபீ ஸர்ஸ்—என்பவர்களே அரசு அதிகாரிகள்தான். அவர்களிடம் இந்தப் புகார் சென்றிருக்கிறது. அவர்கள் சில தகவல்கள் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்தால் மேல் நடவடிக்கை அவர்கள் எடுப்பார்கள்.

Gas Turbine Power Stations

*Q. No. 278—THIRU N, KITTAPPA: Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether the Government propose to set up Gas Turbine Power Stations in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) and (ஆ) திட்டம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பத் தன்மைகள் தமிழ்நாடு மின்வாரியத்தின் ஆய்வில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இத்தகைய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான இடங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்படுகின்றன ? அதை அமைக்க ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவுத் தொகை எவ்வளவு ? அப்படி அது செயல்படுத்தப்படும்போது, தஞ்சாவூர் மா.வட்டத்தில், குறிப்பாக மாயூரத்தில் இப்படிப்பட்ட நிலையத்தை அமைக்க மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் ஏற்பாடுகள் செய்ய முன்வருவாரா என்பதையெல்லாம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1977-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் மூன்று ஜெனரேட்டர்கள் 60 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கான குறிக்கோளை ஆராய வேண்டும் என்று மின் வாரியத்தை இந்த அரசு கேட்டுக் கொண்டது. அதற்குப் பிறகு அது மின்வாரியத்தினால் ஆராயப்பட்டு, அனுப்பப்பட்டது. 6—6—77 அன்று மத்திய அரசோடு மாநில அரசின் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மத்திய அரசு மேலும் சில தகவல்களை கேட்டிருக்கிறார்கள். அது இன்னும் மின் வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பொதுவாக உச்சத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இத்தகைய மின் உற்பத்தி சாதனங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதனை மாயவரத்தில் வைக்கலாமா அல்லது மற்ற இடங்களில் வைக்கலாமா என்பதுபற்றி பரிசீலனை செய்துதான் முடிவெடுக்க முடியும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நீர் உருளை மின் நிலையங்களை தமிழகத்தில் எந்தெந்த மாவட்டத்தில் அரசு அமைக்கவிருக்கிறது? இந்த ஏற்பாடுகளை தர்மபுரி மாவட்டத்திலும் அமைக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது நீர் உருளை அல்ல காஸ் டர்பைன் பவர் டீசல் அல்லது காஸ் வைத்து மின்சாரம் தயாரிப்பது. இங்கே சொல்லப்பட்ட அந்த காஸ் எங்கே தமிழகத்தில் ஏராளமாகக் கிடைக்கும் என்று பார்த்து அங்கே அமைக்கவிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் வைக்கலாமா அல்லது மற்ற இடங்களில் வைக்கலாமா என்பதுபற்றியெல்லாம் பரிசீலனை செய்துதான் முடிவெடுக்க வேண்டும்.

1979 மார்ச் 8]

திரு. ஏ, ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே வாயு என்று போட்டிருக்கிறது. வாயு என்றால், காற்று என்றுதான் நாங்கள் அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். அமைச்சர் அவர்கள் காஸ் என்று சொல்கிறார்கள். தமிழில் மொழிபெயர்க்கும்போது இதையெல்லாம் பார்த்து மொழிபெயர்க்கவேண்டும். தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 60 கோடி ரூபாய் செலவில் கொண்டுவரப்படும் என்றார், 60 கோடி ரூபாய் செலவில் என்றால் எவ்வளவு மின் உற்பத்தி செய்ய இயலும். அது சாத்தியமானதா என்று முடிவெடுக்கப்பட்டதா, அது சாத்தியமானது எனறால், அதை சின்ன அளவிலே சிறு சிறு தொழிலாளர்கள் தங்கள் தேவைக்கான மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்யக்கூடிய அளவில் இருக்கிறதா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காஸ் என்றால் வாயு என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஏர் என்றால் காற்று என்றுதான் மொழிபெயர்க்கப்படும். ஆகவே இதில் தவறு ஒன்றும் இல்லை.

இந்த காஸ் மின்சார உற்பத்தியில் செலவு அதிகம். ஆனால், இப்பொழுது தொழில் நிறுவனங்களுக்கு உச்ச நேரங்களில் போதுமான அளவுக்கு மின்சாரத்தை வழங்க முடியவில்லை ; அதனால் peak hour restriction உச்ச நேர மின்வெட்டு உள்ளது. இதைக் கொண்டு வந்தால் peak hour restriction இல்லாமல் செய்யலாம்.

3 Nos., ... 3 Units of Generator each unit consisting of 2X25 M.W. Gas Turbines.

ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன் கொண்டது.

வாசுதேவநல்லூர் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா எண். 279—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வாசுதேவநல்லூர் பகுதியில் மத்திய அரசின் கிராம மின் இணைப்புக்கழகம் (R.E.C.) பம்பு செட் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க நிதியுதவியும் அனுமதியும் வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?

(இ) வேலை எப்போது தொடங்கும் ? எப்போது முடிவடையும் ?